இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 136 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 11 – வெள்ளிக்கிழமை 26 டிசம்பர் 2025 – சென்னை 12 + 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 136 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 11 - Friday 26 December 2025 - Chennai 12+12 Pages ₹ 5.00




## கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை மாவட்டங்களில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்றும் நாளையும் கள ஆய்வு !

## திட்டப்பணிகளை திறந்து வைத்தும் அடிக்கல் நாட்டியும் 4,82,250 பேருக்கு நல உதவிகள் வழங்குகிறார்!

**சென்னை, டிச.26–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை மாவட்டங்களில் இன்று முதல் இரண்டு நாள் கள ஆய்வுப் பயணம் மேற்கொள்கிறார். இன்று (26.12.2025) கள்ளக்குறிச்சியில் ரூ.139.41 கோடி மதிப்பில் 13.86 ஏக்கர் பரப்பளவில் 8 தளங்கள் கொண்ட புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உட்பட ரூ.1,773.67 கோடி மதிப்பிலான 2,559 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து 62 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி 2,16,056 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.**

நாளை (27.12.2025) திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாவில் ரூ.2,095.07 கோடி மதிப்பிலான 314 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து 46 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி 2,66,194 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இரண்டு மாவட்டங்களிலும் மொத்தமாக 4 லட்சத்து 82 ஆயிரத்து 250 பேருக்கு நல உதவிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்குகிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றும், நாளையும் (26.12.2025 மற்றும் 27.12.2025) கள்ளக்குறிச்சி, திருவண்ணா மலை ஆகிய மாவட்டங்களில் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டு கள ஆய்வுப் பணிகளில் ஈடுபடுகிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முதலில் 26.12.2025 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டம் சென்று வீரசோழபுரத்தில் அனைத்து வசதிகளுடனும், அரசின் அனைத்துத் துறைகளும் ஒரே இடத்தில் செயல்படும் வகையில் ரூ.139.41 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 தளங்கள் கொண்ட மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடத்தை திறந்து வைக்கிறார்.

இந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அலவலகக் கட்டடம் 13.86 ஏக்கர் பரப்பளவில் (மாவட்ட ஆட்சியரகம் தவிர்த்து பிற அலுவலகம் அமைப்பதற்கான மொத்த இடப் பரப்பளவு 39.81 ஏக்கர்) பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டுள்ளது. இதில், மாவட்ட கருவூல அலுவலகம், வேலைவாய்ப்பு அலுவலகம், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மக்கள் குறை தீர்ப்புக் கூட்ட அரங்கம், வங்கி, தபால் அலுவலகங்கள், காணொலிக் காட்சி அறை முதலான பல்வேறு அலுவலகங்களும் இடம்பெற்று, கள்ளக்குறிச்சி மாவட்ட மக்களின் குறைகள் தீர்க்கும் மகத்தான பணிகளை நிறைவேற்றும் வகையில் அமைந்துள்ளது.

**திறந்துவைக்கப்பட உள்ள திட்டப் பணிகள்**

கள்ளக்குறிச்சி மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை சார்பில், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள்,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்




## பொருளாதாரம் மட்டுமல்ல ;

# செயலிழந்த சமூகமாகவும் மாறிக்கொண்டிருக்கிறோம்!

## ராகுல் காந்தி விமர்சனம்!

புதுடெல்லி, டிச.26–



காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி தனது எக்ஸ் தளத்தில் நேற்று கூறியுள்ளதாவது:–

உன்னாவ் பெண்ணை சீரழித்த குற்றவாளிக்கு (முன்னாள் பா.ஜ.க. எம்.எல்.ஏ., செங்கர்) ஜாமீன் வழங்கப்பட்டிருப்பது மிகவும் ஏமாற்றமளிக்கிறது. குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண் மீண்டும் மீண்டும் துன்புறுத்தப்பட்டு, அச்சத்தின் நிழலில் வாழ்ந்து கொண்டிருக்கும்போது ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.

இது என்ன வகையான நீதி? நாம் ஒரு செயலிழந்த பொருளாதாரமாக மட்டும் மாறவில்லை; இது போன்ற மனிதாபிமானமற்ற சம்பவங்களால் நாம் ஒரு செயலிழந்த சமூகமாகவும் மாறிக்கொண்டிருக்கிறோம்.

ஜனநாயகத்தில், மாற்றுக் குரல் எழுப்புவது உரிமை. அதை அடக்குவது குற்றம். பாதிக்கப்பட்டவருக்கு மரியாதையும், பாதுகாப்பும், நீதியும் கிடைக்க வேண்டுமே தவிர கையறு நிலை, பயம் மற்றும் அநீதி அல்ல.

குல்தீப் சிங் செங்கருக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய ஜாமீனுக்கு எதிராக டெல்லியில் போராட்டத்தில் ஈடுபட்ட பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட அந்தப் பெண்ணை மரியாதையுடன் நடத்த வேண்டும். அவருக்கு அநீதியும் அச்சமும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக நீதி உறுதி செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பா.ஜ.க. ஆட்சி நடைபெறும்

# அசாமில் வன்முறை!

## 2 பேர் பலி! 50க்கும் மேற்பட்டோர் படுகாயம்!

கவுஹாத்தி, டிச.26–

அசாமில் வன்முறை ஏற்பட்டதைத் தொடர்ந்து, 2 மாவட்டங்களில் இணைய சேவை முடக்கப்பட்டு, ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்புக்காக ராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

அசாமின் கர்பி அங்லாங் மற்றும் மேற்கு கர்பி அங்லாங் மாவட்டங்களில் உள்ள மேய்ச்சல் நிலங்களில் சட்ட விரோதமாக குடியேறியுள்ள வெளியாட்களை வெளியேற்றக் கோரி பழங்குடியின அமைப்புகள் நீண்ட காலமாக போராடி வருகின்றன. இதன் தொடர்ச்சியாக கடந்த 22ஆம் தேதி, டோங்காமோகமில் பல்வேறு இடங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டது. இதில் 2 பேர் உயிரிழந்தனர். இந்த மோதலில் போலீஸ் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட 50 பேர் படுகாயம் அடைந்தனர். வதந்திகள் பரவுவதை தடுக்க இரு மாவட்டங்களிலும், இணைய சேவை கால வரையின்றி முடக்கப்பட்டுள்ளதுடன், இரவு நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக்காக ராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். அமைதியை ஏற்படுத்தும் விதத்தில், ராணுவத்தினர் கொடி அணிவகுப்பு நடத்தினர்.